(b) This Society was started on 17th January 1944.

(c) The main commodities handled by the Society are Chillies, Cotton and Onions.

(d) The question of organising a separate Marketing Society at Virudhunagar will be taken up if and when the need for a separate society is felt by the agriculturists in the area.

Uplift of Harijans

* 604 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன முன்னேற்றத்துக்காகத் தொண்டாற்றிய பிரமுகர்களுக்குப் பரிசுகள் எந்த வருஷத்திலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன ?

(ஆ) 1958-ஆம் வருஷம் வரைக்கும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட்டிருக்கும் ஜில்லா ஹரிஜன நல இலாகா கமிட்டி மூலமாக இப் பிரமுகர்களைத் தேர்ந்தெடுக்கும் படியாக சர்க்காரால் ஏதாவது உத்திரவு பிறப்பிக்கப்பட பரிசீலனை நடைபெற்று வருகிறதா ?

THE HON. SRI P. KAKKAN: (a) The award of prizes in the form of medals to those who have rendered service in the cause of removal of untouchability is in force from 1956.

(b) A statement [a] is placed on the table of the House.

(c) No, Sir.

SRI P. G. MANICKAM : சார், உண்மையாகவே ஒவ்வொரு ஜில்லாவிலும் யார் யார் ஹரிஜனங்களுக்காகத் தொண்டாற்றுகிறார்கள் என்பது ஹரிஜன எம்.எல்.ஏ.-க்களுக்கு நன்றாகத் தெரியுமாதலால், கலெக்டர் அவர்கள் " லிஸ்டைத் " தயார் செய்யும்போது ஹரிஜன எம்.எல்.ஏ.க்களைக் கலந்துகொண்டு செய்ய உத்தரவு இடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கலெக்டர் அவர்களுக்கும் ஆங்காங்கு யார் யார் ஹரிஜனங்களுக்காகச் சேவை செய்கிறார்கள் என்று நன்றாகத் தெரியும். ஹரிஜன அட்வைசரி கமிட்டி என்று இதற்காக வைத்திருக்கிறார்கள். அந்தந்த ஜில்லாக்களில் இருக்கும் இதர தலைவர்களையும் கலந்துகொண்டுதான் கலெக்டர் லிஸ்டைத் தயார் செய்கிறார். கனம் அங்கத்தினர் அவர்கள் அப்படிப்பட்ட பெயரைச் சொன்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

SRI K. PERIANNAN : ஜில்லா ஹரிஜன நலக் கமிட்டியில் உள்ள ஹரிஜன எம்.எல்.ஏ.க்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்களா ? இல்லையென்றால் ஹரிஜன எம்.எல்.ஏ.க்களை அங்கத்தினர்களாகச் சேர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து பார்த்துப் பதில் சொல்லுகிறேன்.

SRI K. B. S. MANI : முன்பு இந்த மெடல்கள் பிரபலமாக ஊழியம் செய்த ஹரிஜன ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டில் இருந்து ஜாதி இந்துக்களுக்கு மட்டுந்தான் கொடுக்கப்படுகிறது. ஏன் ?

THE HON. SRI P. KAKKAN : யார் யார் சேவை செய்கிறார்களோ அவர்கள் எல்லோருக்குந்தான் கொடுக்கப்பட்டுவருகிறது.

---

[a] Printed as Appendix I on page 514 infra.

6th March 1959]

Sri S. M. ANNAMALAI : இதற்காக ஒதுக்கபட்ட பணம் பூராவும் செலவழிக்கப்பட்டுவிட்டதா ? இல்லையா ?

The Hon. Sri P. KAKKAN : இந்த வருஷம் மெடல் கொடுக்க கால தாமதமானால் அடுத்த வருஷம் கொடுக்கப்படும்.

Bus routes

* 605 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-வது ஆண்டு இறுதிக்குள் பஸ் ரூட்டுகளை அதிகப் படுத்தும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் என்றால் ஜில்லாவாரியாக எத்தனை ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The proposals for increase of bus routes that are under consideration in the districts are as follows :—

Name of district.	Number of proposals for increase of bus routs that are under consideration.
North Arcot	34
Tiruchirappalli ..	14
Madurai	7
South Arcot	55
Tanjore	7
Salem	9
The Nilgiris	5
Tirunelveli	8
Chingleput	108
Kanyakumari	13
Coimbatore	12
Ramanathapuram	16

Sri V. K. KOTHANDARAMAN : சார், 1957-ம் ஆண்டில் பஸ் ரூட்டுகளை 25 சதவிகிதம் அதிகப்படுத்த வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டதா ? ஆனால் இதுவரையில் 10 சதவிகிதம் கூட அதிகப்படுத்தப் படவில்லை. 25 சதவிகிதம் அதிகப்படுத்த எவ்வளவு காலம் ஆகும் ?

The Hon. Sri V. RAMAIAH : 25 சதவிகிதம் அதிகப்படுத்த வேண்டுமென்று உத்தரவின்படிதான் இப்பொழுது எந்தெந்த ஜில்லாக் களில் எங்கெங்கு அதிகப்படுத்த வேண்டுமோ அதை எல்லாம் முறையாகப் பரிசீலனை செய்து தேவைக்குத் தகுந்தவாறு அதிகப்படுத்தி வருகிறோம்.

Sri A. A. RASHEED : Sir, may I know whether the Government have received any communication from the Railway Ministry asking this Government to go slow with the issue of bus and lorry permits in our State?

The Hon. Sri V. RAMAIAH : The issue of bus and lorry permits is mainly our responsibility to meet the needs and the requirements of the people.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : சேலம் ஜில்லாவில் 9 பஸ்களுக்கு ரூட்டுகள் கொடுக்கப்பட்டன என்று கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது சொன்னார்கள். அப்படியென்றால் அதன் புள்ளி விவரத்தைக் கொடுக்கமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : ப்ரபோசல் ஆர்.டி.ஓ. ஆபீஸில் இருக்கிறது. அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.